# பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறு

2020-11-08

**இன்றைய வாசகங்கள்:**

சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம் 6: 12-16,
திபா 63: 1. 2-3. 4-5. 6-7,
திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 4: 13-18,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 25: 1-13

## திருப்பலி முன்னுரை:

"இறைவா! என் மனம் எனும் விளக்கை உன் ஆவி எனும் எண்ணெயினால் நிரப்பும். அப்போது இவ்வுலகம் முடியும் வரை என்னால் ஒளி கொடுக்க முடியும்" என்னும் பாடல் வரிகளையும், நம்முடைய தயாரிப்பு வாழ்வையும், தயார்நிலை வாழ்வையும் சிந்திக்க இன்றைய பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறு வழிபாட்டுக் கொண்டாட்டம் நம்மை அழைக்கின்றது.

உலக அறிவு வரையறைக்குட்பட்டது. மெய்யறிவு எல்லையற்றது. இவ்வேளையில் நாம் இன்றைய நற்செய்தியில் வரும் அறிவிலிகளைப் போல இல்லாது முன்மதியுள்ளவர்களைப்போல் இருக்க வேண்டும். மானிட மகன் வரும்பொழுது தயாராக இருப்போர் அழைத்துக்கொள்ளப்படுவர். எனவே நாம் அனைவரும் எப்பொழுதும் முன்மதியுடைய தோழிகளைப்போல் ஞானமுள்ளோராய் வாழ வேண்டி இத்திருப்பலியில் தொடர்ந்து பங்கெடுப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**ஆயனே எம் இறைவா!**
எம் தாய் திருச்சபையை வழி நடத்தும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவறத்தார் ஆகிய அனைவரும் பெரிய குருவாகிய இயேசுவின் வழி நடந்து மக்களுக்காக உழைத்திட வேண்டிய ஞானத்தைத் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஞானத்தை அருளுகின்றவரே இறைவா!**
அணையா விளக்குகளைக் கொண்டிருந்த விவேகிகளைப் போல நாங்களும் முன்மதியுடனே எங்கள் அன்றாட வாழ்விலும், ஆன்மிக வாழ்விலும் செயல்பட, உமது தூய ஆவியின் வல்லமையால் ஞானத்தை அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஒளியானவரே இறைவா!**
எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற கடமைகளையும், பணிகளையும் எந்த நேரத்திலும் நேர்மையாக செய்து, எங்களைச் சுற்றியிருப்போருக்கு கிறிஸ்துவைப் பிரதிபலிப்பவர்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆயத்தமாயிருக்க அழைப்பவரே இறைவா!**
உலகின் முடிவிலும், எங்களது வாழ்வின் முடிவிலும் இறைமகன் இயேசுவை சந்திக்க விழிப்புடனே செயல்பட்டு இறையாட்சிக்குள் நுழையும் தகுதியைத் தருகின்ற நேரிய பாதைகளைப் பற்றிக் கொண்டு, உமது ஆற்றலையும், மாட்சியையும் கண்டு மகிழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இறை நம்பிக்கையில் வாழ்ந்து மரிப்போர் இறையாட்சியில் நுழையும் தகுதி பெறுவார்கள் என்றுரைத்தவரே இறைவா!**
எங்கள் குடும்பங்களிலே இறை விசுவாசத்தில் வாழ்ந்து மரித்துள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் உமது பேரிரக்கத்தால் அமைதியும், ஒளியும் கொண்ட நிலைவாழ்வை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பின் இறைவா,**
யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.